பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
25 07 2025 **FRIDAY** 6 30 **PM**
வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இந்தியா – மாலத்தீவு இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுக்களை தொடங்குவதென இருநாடுகளும் முடிவு செய்துள்ளன.

2. ஆப்பரேஷன் சிந்தூர் குறித்த விவாதம் மக்களவையில் வரும் திங்கட்கிழமை நடைபெறும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

3. காட்டுப் பன்றிகளால் விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்புகளை தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. மேட்டூர் அணையின் நீர்மட்டம் நடப்பாண்டில் நான்காவது முறையாக அதன் முழுக் கொள்ளளவான 120 அடியை இன்று எட்டியது.

5. பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான உலக விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

>>>>><<<<<

அரசுமுறைப் பயணமாக மாலத்தீவு சென்றுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி அந்நாட்டு அதிபர் திரு. **Mohamed Muizzu**-வுடன் பேச்சு நடத்தினார்.

**Male**-யில் நடைபெற்ற இந்த பேச்சுக்களின் போது, இருநாடுகளுக்கு இடையேயான உறவை வலுப்படுத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த பேச்சுகளுக்குப் பின்னர் இருநாடுகளுக்கும் இடையே பல்வேறு ஒப்பந்தங்களும் கையெழுத்தாகின.

இதனைத் தொடர்ந்து, இரு நாட்டு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களிடம் பேசினர்.

இந்தியா – மாலத்தீவு இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுக்களை தொடங்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டிற்கு ஊக்கமளிப்பதென பரஸ்பரம் ஒப்புக் கொள்ளப்பட்டிருப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

இருநாடுகளுக்கு இடையேயான உறவு வரலாற்றுச் சிறப்புமிக்கது என்றும் திரு. நரேந்திர மோடி கூறினார்.

>>>>><<<<<

ஆப்பரேஷன் சிந்தூர் குறித்த விவாதம் மக்களவையில் வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 16 மணி நேரம் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மாநிலங்களவையைப் பொறுத்தவரை இதற்கான விவாதம் செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

மழைக்கால கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்பாகவே இதுகுறித்து விவாதம் நடத்தப்படும் என்று மத்திய அரசு, எதிர்க்கட்சிகளிடம் தெரிவித்ததையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும், கூட்டத் தொடரின் முதல் நாள் தொடங்கி, எதிர்க்கட்சிகள் அவை நடவடிக்கைகளை முடக்கி வருவதாக அவர் குறை கூறினார்.

எந்தவொரு பிரச்சினை குறித்தும் விவாதிக்க மத்திய அரசு தயாராக உள்ளதாகவும், அவை நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெற எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் திரு. கிரண் ரிஜிஜு கேட்டுக் கொண்டார்.

>>>>><<<<<

பிரதமராக திரு. நரேந்திர மோடி, 4 ஆயிரத்து 78 நாட்களை கடந்து சாதனை படைத்துள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் செய்தி தொடர்பாளர் திரு. சுதான்சு திரிவேதி, இதன் மூலம் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் சாதனையை முறியடித்துள்ளதாக கூறினார்.

>>>>><<<<<

காட்டுப் பன்றிகளால் விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்புகளை தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வனத்துறை அமைச்சர் திரு. ராஜ கண்ணப்பன் கூறியுள்ளார்.

இன்று திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - ராஜ கண்ணப்பன் 45 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

பிரதமரின் உணவு பதப்படுத்துதல் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், இளையோரிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ், மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமில் ஏராளமானோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட — ரகுராஜா 47 செகண்ட்ஸ்)

இந்த பயிற்சி முகாம் தங்களுக்கு பெரிதும் உதவிகரமாக இருந்தது என்று பயனாளிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பயனாளிகள் 44 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

நீலகிரி, கோவை, தேனி, தென்காசி, திருநெல்வேலி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன் 40 செகண்ட்ஸ்)

கடலோரப் பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால், அடுத்த 4 நாட்களுக்கு மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்றும் திரு. செந்தாமரைக்கண்ணன் கேட்டுக் கொண்டார்.

இதற்கிடையே, காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக, மேட்டூர் அணையின் நீர்மட்டம் நடப்பாண்டில் நான்காவது முறையாக அதன் முழுக் கொள்ளளவான 120 அடியை எட்டியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - விஜயகுமார் 40 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் புதிதாக கட்டப்பட்டு வரும் குழந்தைகள் நலன் மற்றும் ஆராய்ச்சி மைய கட்டிடப் பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு. அருண் தம்புராஜ் இன்று ஆய்வு செய்தார்.

>>>>><<<<<

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை ஆட்சியர் திருமதி. அழகுமீனா இன்று ஆய்வு செய்தார்.

>>>>><<<<<

தேனி மாவட்டம், சுருளி அருவியில் மீண்டும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தூத்துக்குடி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கண்காணிப்பாளர் திரு. பிரதீப் குமார் தலைமையில் இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான உலக விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

ஜெர்மனியில் நடைபெற்று வரும் இப்போட்டிகளின் கலப்பு குழு வில்வித்தைப் பிரிவில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

ஆடவர் வில்வித்தை குழுப் பிரிவில் இந்தியா வெள்ளிப்பதக்கத்தையும், மகளிர்க் குழுப் பிரிவில் வெண்கலப்பதக்கத்தையும் வென்றது.

>>>>><<<<<

இந்தோனேஷியாவில் ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Vennala Kalagotla** மற்றும் தன்வீ சர்மா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் தன்வீ சர்மா, 21-19, 21-14 என்ற செட்கணக்கில் இந்தோனேஷியாவின் **Thalita Wiryawan-**ஐ வென்றார்.

>>>>><<<<<

**Lagos** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் - **Pal Akash** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டிக்கான 20 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

**Lovlina Borgohain, Nikhat Zareen** உட்பட 20 பேர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

**>>>>><<<<<**

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நான்கு நட்புணர்வு ஹாக்கி போட்டிகளில் இந்தியா பங்கேற்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

சுவிட்சர்லாந்துக்கு எதிராக டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமித் நாகல் உட்பட 8 பேர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

**>>>>>END<<<<<**